**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி.**

முன்னிலை : திருமதி. V.R.லதா, M.A., B.L.,

முதன்மை மாவட்ட நீதிபதி, கிருஷ்ணகிரி.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.27/2025**

**[CNR.No,TNKI01-000247-2025]**

மதியழகன், த/பெ. சுப்ரமணி, வயது சுமார் 52 வருடங்கள், வசிக்குமிடம் கதவு எண்.5/484, அரசம்பட்டி, பெண்டறஅள்ளி தரப்பு, போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம். தற்போது வசிக்குமிடம் குஞ்சாம்பாளையம், ராசாம்பாளையம் கிராமம், கீரம்பூர் அஞ்சல், நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

... வாதி

/ எதிராக/

1. தமிழ்செல்வி, க/பெ. ரவி, வயது சுமார் 47 வருடங்கள், வசிக்குமிடம் கதவு எண்.66ஏ, அரசம்பட்டி, பெண்டறஅள்ளி தரப்பு, போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. ரவி, த/பெ. விஜய ரங்கநாயுடு, வயது சுமார் 55 வருடங்கள், வசிக்குமிடம், கதவு எண்.66ஏ, அரசம்பட்டி, பெண்டறஅள்ளி தரப்பு, போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

... பிரதிவாதிகள்

**Date of Presentation:20.01.2025** **Value of the Suit: Rs.11,70,600/-**

| | |
|---|---|
| **Cause of Action:** 17.04.2017, 22.10.2019, 19.01.2020,16.12.2024. | **Court Fee Paid**: **Rs.35,118/-** U/S 25(a) of TNCF Act Rs.35,118/- |

தாவா சொத்தில் வாதிக்குண்டான உரிமையை விளம்புகை செய்யக் கோரியும் அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிக்கு பிரதிவாதிகள் ஒப்படைக்க வேண்டி சுவாதீன பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கானது என் முன்னர் 05.03.2026–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பரமேஸ்வரன், அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில்

வழக்கறிஞர் திரு.M.பச்சையப்பன் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்து, நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்யாததாலும், 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும் இருவரும் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசலீனை செய்தும். இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன்பு பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1] இறுதியாக, விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

2] தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், பிரதிவாதிகள் இன்றிலிருந்து 3 மாத காலத்திற்குள் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க வேண்டி சுவாதீன பரிகாரம் வழங்கியும், தவறும் பட்சத்தில் வாதி நிறைவேற்று மனு தாக்கல் செய்து சவாதீனம் பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து செலவுத் தொகையுடன் ஆணையிடப்படுகிறது.

3] பிரதிவாதிகள் வழக்கு செலவுத்தொகையாக **ரூ.45,581**/ஐ வாதிக்கு செலுத்த வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

## சொத்து விவரம்

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், தருமபுரி பதிவு மாவட்டம், பாரூர் சார் பதிவகம், பெண்டறஅள்ளி–2 கிராம சர்வே எண்.545/1 நன்செய் ஹெக்டர் 0.41.0க்கு ஏக்கர் 1.02 தீர்வை 9.25 இதில் தென்பெண்ணை ஆற்றுக்கு போகும் ரோட்டுக்கு தெற்கு, கே.ஆர்.மாதேஷ்குமார் பாக மனைக்கு கிழக்கு, வடக்கு, தாண்டவன் மற்றும் பழனியம்மாள் பாக மனைகளுக்கு மேற்கு, இதன் மத்தியில் கிழமேல் இருபுறமும் 26 அடி, தென்வடல் இருபுறமும் 50 அடி, ஆக 1300 சதுரடி அல்லது 120.77 சதுர மீட்டர் காலி மனையும், இதில் சுமார் ஏழு வருடத்துக்கு முன் செங்கல் மற்றும் சிமெண்ட் இவைகளால் கட்டப்பட்ட ஆர்.சி.சி. வீட்டின் பூரா பாத்தியமும், இதன் அளவு விவரம். கிழமேல் 22 அடி,

தென்வடல் 26 அடி ஆக 572 சதுரடி அல்லது 53.14 சதுர மீட்டர் ஆகும். இதில் உள்ள மின் இணைப்பு எண்.1024–ன் பூரா பாத்தியமும், இதற்குண்டான மாமூல் வழியில் போக வர வழி பாத்தியமும் உட்பட சேர்த்து உமக்கு சுத்தக் கிரையமும் சுவாதீனமும் செய்து உள்ளது ஆகும். மேற்கண்ட கிரைய சொத்தின் தற்கால பட்டா எண்.1086, சர்வே எண்.545/1பி நன்செய் ஹெக்டர் 0.01.0 ஆகும். இதன் கதவு எண்.5/484 ஆகும். மேற்கண்ட கிரைய சொத்து காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தையும், அரசம்பட்டி ஊராட்சியையும் சார்ந்தது ஆகும்.

| **செலவுத் தொகைப் பட்டியல் விவரம்** | | | |
|---|---|---|---|
| | | வாதி தரப்பு Rs. | பிரதிவாதிகள் தரப்பு Rs. |
| 1. | பிராது ஸ்டாம்ப் | 35,118.00 | – |
| 2. | வக்காலத்து ஸ்டாம்ப் | 10.00 | – |
| 3. | வழக்கறிஞர் கட்டணம் | 10,428.00 | – |
| 4. | புராசஸ் கட்டணம் | 25.00 | |
| | **Total Rs.** | 45,581.00 | – |

(இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

2026 –ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ஆம் நாள், என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

LATHA V R Digitally signed by LATHA V R

முதன்மை மாவட்ட நீதிபதி
கிருஷ்ணகிரி.